1981 மே 14]

கொண்டு இருக்கிறது. விரைவில் செயல்படுத்தப்படும். இன்றைக்கு அதன் காரணமாக பல நன்மைகள் ஏற்பட இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று நம்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்தப் பத்திரப் பதிவு முறையை மலேசியாவில் இருப்பதைப் போல், இங்கே கொண்டு வர அரசு முன் வருமா? மலேசியாவில் பத்திரங்களைப் பதிவு செய்கிற காலத்திலேயே பாஸ்போர்ட் சிஸ்டம்போல் அவர்களே ஒரு அச்சடித்த பாரங்களில் பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். அதனால் உடனடியாகப் பத்திரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு நகல் அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். இன்னொரு நகல் அரசாங்கமே வைத்துக்கொள்கிறது. அது மாதிரி அந்த சொத்து மாற்றம் செய்கிற போதும், அந்தப் பாரத்திலேயே இன்னொரு காலத்தை பூர்த்தி செய்து கொடுத்தால், அது முடிவு அடைந்து விடுகிறது. ஆகவே இதன் காரணமாக உடனுக்குடன் அந்த பதிவுமுறை முடிந்துவிடுகிறது. ஆகவே மலேசியாவில் உள்ள அந்த முறையை இங்கே நம்முடைய நாட்டுக்கு ஏற்ற மாற்றங்களுடன் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசீலனை செய்ய முயல்வோம்.

சென்னை நகரில் திரையரங்குகள் கட்டுவதற்கான மாநகராட்சியின் திட்டம்

*வினா எண். 1031— திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி, சென்னை நகரில் திரையரங்குகள் கட்டக் கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு— • (அ) ஆம்.

(ஆ) பட்டினப்பாக்கம் பகுதியில் ஒசியானிக் விடுதிக்கருகில் தெற்குக் கால்வாய் கரைச் சாலையில் ரூ. 97.40 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் வள்ளுவர் கோட்டம் அருகில் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ரூ. 88 இலட்ச மதிப்பீட்டில் பல்பொருள் நவீன அங்காடியினைக் கொண்ட திரையரங்கு ஒன்றைக் கட்டுவதற்கும் சென்னை மாநகராட்சி திட்டம் தயாரித்து அரசின் ஒப்பளிப்புக்காக அனுப்பியிருக்கிறது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 மே 14

திரு. ஏ. சி. சண்முகம்:—தலைவரவர்களே, இரண்டு திரை அரங்குகளைக் கட்டு து பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்போது தொடங்கப்படும். மாநகராட்சியே பெங்களூரில் உள்ள 'டிரைவ் இன் தியேட்டர், மாதிரி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்காக இந்த இரண்டு திரை அரங்குகளையும் 2 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. டிரைவ் இன் தியேட்டரைப் பொறுத்தவரை ஏற்கெனவே பொதுப்பணித் துறை மெரினா கடற்கரையில் கட்டுவதாக ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறது. அப்படி பொதுப்பணித்துறை கட்டவில்லை என்றால் மாநகராட்சி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கோம்பை ரங்கநாதர் கோவிலில் இருந்து ராமக்கல் மெட்டுவரை பாதை போடுதல்

*வினா எண். 1032—திரு ஆர். டி. கோபாலன்: திரு வே,இரா. ஜெயராமன்: மற்றும் திரு. கா. கோபாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சிதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து ராமக்கல் மெட்டுவரை கேரள எல்லையிலுள்ள பாதையுடன் இணைக்கும் பாதை போட அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு, ஆர், டி, கோபாலன்: தலைவரவர்களே, இந்த கோம்பை ரங்கநாதர் கோவில் அடிவாரத்திலிருந்து போடப்படும் சாலைக்கு எப்போது வேலை தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை மொத்தம் 15 கிலோமீட்டர் நீளம் உள்ளது. இதற்கு மதிப்பீட்டுச் செலவு 70 இலட்சம் ரூபாய். இது 1981–82–வது மாவட்ட பெரும் சாலைகள் திட்டமாக இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. வேலைகள் சீக்கிரமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டவுடன் தொடங்கப்படும்.

நாட்டாற்றின் குறுக்கே வண்டிப்பாலம் கட்டும் திட்டம்

*வினா எண். 1033— திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா